மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கௌசிக் ராஜ் | நாள் | 30.08.2023 |
| தகப்பனார் பெயர் | சந்திர சேகர் | | |

**1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

48) காந்தி சிலையிலிருந்து செல்லும் பாதை கற்கரையில் முடிகிறது என்றால், சரிதான். மேற்படி பாதை முடியும் இடத்தில் வடக்கு பகுதியில் என் தந்தைக்கு பாத்தியப்பட்ட கிரய சொத்து உள்ளது என்றால், சரிதான். மேற்படி கிரய சொத்திற்கு வடக்குபுறத்தில் சிந்தாமணியூர் செல்லும் தார்சாலை உள்ளது என்றால், வீட்டை ஒட்டியவாறு இல்லை. 4, 5 வீடுகள் தாண்டி வடக்குபுறத்தில் தார்சாலை உள்ளது.

49) மேற்படி என் தந்தைக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கும் மேற்படி சிந்தாமணியூர் தார்சாலைக்கும் இடையேயுள்ள மேற்படி நிலங்கள் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டு அவரால் விற்பனை செய்யப்பட்ட இடங்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

50) என் தந்தைக்கு பாகபிரிவினையின் பாத்தியப்பட்ட சொத்துக்களில் தறி கொட்டகை மற்றும் வீடுகள் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி தறி கொட்டகை மற்றும் வீடுகள் ச.எண்.284/4A ல் அமைந்துள்ளது என்றால், மேற்படி ச.எண்.284/4A விலும் அமைந்துள்ளது. அது தவிர அதனுடன் இணைந்தாற் போல் உள்ள மற்றொரு சர்வே எண்ணிலும் மேற்படி வீடுகளும், தறி கொட்டகையும் அமைந்துள்ளன. தற்போது மேற்படி மற்றொரு சர்வே எண் எனக்கு நினைவில்லை.

51) என் வழக்குரை சொத்து விவரத்தில் மேற்படி ச.எண்.284/4A ல் அமைந்துள்ள வீடுகளும், தறிக்கொட்டகையும் என்று மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றாலும், வேறு சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும், சரிதான். மேற்படி வீடுகள் மற்றும் தறிக்கொட்டகை அமைந்துள்ளதாக நான் சொல்லியுள்ள மற்றொரு சர்வே எண்ணுக்கு என் பெயரிலோ அல்லது என் தகப்பனார் பெயரிலோ உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

52) மேற்படி தறிக்கொட்டகை மற்றும் வீடுகள் அமைந்துள்ள மற்றொரு சர்வே எண் குறித்து என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை பத்திரத்திலேயே மற்றொரு சர்வே எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதற்கான புல வரைபடமும் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் என் பாகபிரிவினை பத்திரத்தில் ச.எண்.284/4A என்ற சர்வே எண் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதில் வீடுகளோ, தறிக்கொட்டகை குறித்தோ குறிப்பிடப்படவில்லை என்றாலும், மேற்படி மற்றொரு சர்வே எண் குறித்தும் பாகபிரிவினை பத்திரத்தில் எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும், மேற்படி மற்றொரு சர்வே எண் தொடர்பாக என் பெயரிலோ, என் தகப்பனார் பெயரிலோ எவ்வித ஆவணங்களும் இல்லை என்றாலும், சரியல்ல.

53) மேற்படி பாகபிரிவினை பத்திரத்திலுள்ள ச.எண்.284/4A ற்கும் தற்போது நான் வீடும், தறிக்கொட்டகையும் அமைந்துள்ளதாக சொல்லும் நிலத்திற்கும், எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

54) மேற்படி காந்தி சிலையிலிருந்து செல்லும் பாதை கற்கரையில் முடியும் இடத்தில் தெற்கு பகுதியில் என் தந்தைக்கு பாகபிரிவினையின் படி ஒதுக்கப்பட்ட சொத்து அமைந்துள்ளது என்றாலும், எனவே மேற்படி தெற்கு பகுதியில் உள்ள நிலத்தில் உள்ள பாதை வழியாகவே எங்களது அனைத்து நிலத்திற்கும் செல்ல முடியும் என்றால், சரிதான். மேற்படி நிலம்தான் தற்போது இவ்வழக்கில் சர்வே எண்.284/2B11B என உட்பிரிவு செய்யப்பட்டு பிரச்சனை உள்ள பகுதியாகும்.

55) சிந்தாமணியூர் பிரதான சாலையிலிருந்து மாணிக்கம் வகையறா அவர்களுக்கு சொந்தமான வீடுகளுக்கும், 1ம் பிரதிவாதியின் வீடுகளுக்கும் இடையே 10 அடி அகலத்தில் செல்லும் தென்வடல் பாதையானது ரைஸ் மில் சிந்தாமணி என்பவரது நிலத்துடன் முடிவடைகிறது என்றால், சரியல்ல. மேற்படி பாதைக்கு தெற்கு பகுதியில் மேற்படி ரைஸ் மில் சிந்தாமணி நிலமும், அதை ஒட்டியவாறு கிழக்கு பகுதியில் எங்களது நிலமும் உள்ளது. மேற்படி பாதை இருவருக்கும் பொதுப்பாதை தான்.

56) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி பாதைக்கு ஒட்டியவாறு என் நிலம் இல்லை என்றாலும், ரைஸ் மில் சிந்தாமணி நிலத்திலிருந்து 4, 5 அடி தள்ளி கிழக்கு பகுதியில் தான் எங்கள் நிலம் உள்ளது என்றாலும், மேற்படி பாதை பொது பாதை இல்லை என்றாலும், 1ம் பிரதிவாதிக்கும், மாணிக்கம் வகையறாவிற்கு மட்டுமே பாத்தியப்பட்ட பாதை என்றாலும், சரியல்ல.

57) எங்களுடைய பாகபிரிவினை சொத்திற்கும், மாணிக்கம் வகையறா மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சுய சம்பாத்திய சொத்துக்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால், சரிதான். ஆனால், நாங்கள் பாகபிரிவினை செய்வதற்கு முன்பே 1ம் பிரதிவாதி அவரது சுய சம்பாத்திய சொத்துக்களை கிரயம் பெற்றுவிட்டார். எங்கள் குடும்ப பாகபிரிவினையில் மேற்படி சுய சம்பாத்திய சொத்துக்களும் சேர்க்கப்பட்டு தான் பாகபிரிவினை செய்யப்பட்டது. அதனால், மேற்படி சுய சம்பாத்திய சொத்திற்கு தொடர்புடைய பாதையும், பாகபிரிவினை பத்திரத்திற்கு உட்பட்டதுதான். அவ்வாறு நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

58) என் தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சுயமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் பாகபிரிவினை பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றாலும், அவ்வாறு சுய சம்பாத்திய சொத்துக்களும் பாகபிரிவினைக்கு உட்பட்டது என நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

59) மேற்படி தென்வடலாக செல்லும் 10 அடி பாதை 1ம் பிரதிவாதியின் நிலத்தில் எந்த திசையில் அமைந்துள்ளது என குறிப்பாக நான் சொல்லவில்லை என்றால், சரிதான். வழக்குரை சொத்து விவரத்தில் செக்குபந்தி விவரத்தில் சர்வே எண்.284/2B12 க்கும், 5 அடி அகல மண்பாதைக்கும் மேற்கு என நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி 5 அடி மண்பாதையை பொறுத்து எந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், மேற்படி 5 அடி மண்பாதையை தான் அரசு ஆவணங்களில் காலி மனை என வகைபாடு செய்துள்ளனர்.

60) நான் மேற்படி தென்வடலாக செல்லும் 10 அடி பொதுப்பாதையை குறிப்பிட்டுள்ள

நிலையில், அதற்கு தொடர்புடைய உரிமையாளர்களான மாணிக்கம் வகையறாவை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். மேற்படி 10 அடி அகல தென்வடல் பொது பாதையை பொறுத்து மாணிக்கம் வகையறாவிற்கும், 1ம் பிரதிவாதிக்கும் மட்டும் தான் உரிமையுள்ள நிலையில், மேற்படி மாணிக்கம் வகையறா இவ்வழக்கை பொறுத்து அவசிய தரப்பினர் என்பதால், அவர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. மேற்படி பொது பாதையில் எங்களுக்கும் உரிமை உண்டு.

61) தாவா 2–வது அயிட்ட சொத்தில் குடிநீர் இணைப்புகள் பதிக்கப்பட்டது தொடர்பாக பஞ்சாயத்தில் விதிக்கப்பட்ட விண்ணப்பம் அது தொடர்பாக அவர்கள் அளித்த தீர்மான நகல் ஆகியவற்றை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், குடிநீர் கட்டண ரசீதை தாக்கல் செய்துள்ளேன். மேலும் மேற்படி குடிநீர் இணைப்புகள் அனைத்தும் பாகபிரிவினைக்கு முன்பே ஏற்படுத்தப்பட்டவை.

62) பாகபிரிவினை பத்திரத்தில் மேற்படி குடிநீர் இணைப்புகள் பற்றி எவ்வித குறிப்புகளும் இல்லை என்றால், சரிதான். என் வழக்குரையில் 1ம் பிரதிவாதி குடிநீர் இணைப்புகளை உடைத்துவிட்டதாக நான் கூறியுள்ளேனா என்றால், இல்லை. அவர் உடைக்கப் போவதாக மிரட்டி வருகிறார் என்று தான் கூறியுள்ளேன்.

63) என் வழக்குரை சொத்து விவரத்தில் செக்குபந்தி விவரத்தில் நான் பாதைகளாக காண்பித்துள்ள நிலங்கள் அனைத்துமே நத்தம் நிலங்கள் என்றால், இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்புகளின் படி ஊதா நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நிலங்கள் என் தந்தைக்கு பாகபிரிவினை படியும், மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதிகள் 1ம் பிரதிவாதிக்கு பாகபிரிவினை படியும், நீல நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதிகள் மேற்படி நிலங்களுக்கு சென்று வர இருவருக்கும் பொதுவில் ஒதுக்கப்பட்ட பொது தடவழி என்றாலும், சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் **பி.வா.சா.ஆ. 11 (Ex.B.11)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

64) மேற்படி மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள படி சிந்தாமணியூர் பிரிவு ரோட்டிலிருந்து

சிந்தாமணியூர் செல்லும் சாலைக்கு மேற்கு புறத்தில் மேற்படி பாகபிரிவினையில் கண்டுள்ளபடி என் தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு செல்வதற்காக இருவருக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்ட பொது பாதை தொடங்குகிறது என்றால், சரிதான். மேற்படி பொது பாதை வழியாக சென்றால், என் தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட அனைத்து நிலங்களுக்கும் சென்றடையலாம் என்றால், சரியல்ல.

65) மேற்படி ச.எண்.284/4A ல் உள்ள என் தந்தைக்கு பாகபிரிவினையாக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வடமேற்கு பகுதியில் உள்ள நிலம் மேடாக அமைந்துள்ளதால், அதற்கு நான் செல்ல வேண்டும் என்றால், மேற்படி பொது தடத்திலிருந்து ச.எண்.284/4A ல் உள்ள இதர நிலப்பகுதிகள் வழியாக நான் என்னுடைய நிலத்தில் தடம் அமைத்துக்கொண்டால் மட்டும் தான் அதற்கு செல்ல முடியும். தற்போது மேற்படி மேடான நிலப்பகுதிக்கு வடக்குபுறமாக உள்ள ( ச.எண்.284/2B6)ல் அமைந்துள்ள பொதுப்பாதையின் வழியாக வந்தால்தான் மேற்படி நிலத்திற்கு செல்ல இயலும்.

66) ச.எண்.284/4A ல் உள்ள என்னுடைய மற்ற நிலத்தின் வழியாக சாலை அமைத்தால் என்னுடைய நிலம் வீணாகிவிடும் என்பதற்காகத்தான் நான் மேற்படி ச.எண்.284/2B6 ல் உள்ள நிலத்தின் வழியாக நான் தற்போது தவறாக உரிமை கோருகிறேன் என்றால், சரியல்ல. மேற்படி ச.எண்.284/2B6 ல் உள்ள பாதை வழியாக மேற்படி என்னுடைய பாக நிலத்தை அடைவதற்கு எனக்கு உரிமை உள்ளது.

67) ச.எண்.284/2B6 ல் உள்ள நிலத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், மேற்படி ச.எண்.284/2B6 ஆனது 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றாலும், அதில் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றாலும், சரியல்ல. மேற்படி ச.எண்.284/2B6 ஆனது எந்த ஆவணத்திலும் யாருடைய பெயரையும் குறிப்பிட்டு அவர்களுக்கு சொந்தமானது என சொல்லப்படவில்லை. அது அரசு ஆவணங்களில் பொது பாதை எனதான் வகைபாடு செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி ச.எண்.284/2B6 ஆனது காலி நிலம் என்றுதான் வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

68) தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் பி.வா.சா.ஆ.11ல் காந்தி சிலையிலிருந்து தெற்கு நோக்கி வரும் பொதுப்பாதையானது என் தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பாகபிரிவினையில் கூட்டாக ஒதுக்கப்பட்ட பொதுப்பாதையில் வந்து சேர்கிறது என்றால், சரிதான்.

69) மேற்படி காந்தி சிலையிலிருந்து தெற்கு நோக்கி வரும் பொது பாதையானது எங்களுக்கு பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட கூட்டுப் பொதுப்பாதையில் இணைந்து 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கிழக்கு பகுதியில் சென்று என் தந்தையின் பாகபிரிவினை சொத்திற்கும், 1ம் பிரதிவாதியின் பாகபிரிவினை சொத்திற்கும் மத்தியில் சென்று என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட வீடு வரை சென்று பின் கிழக்கு நோக்கி திரும்பி சிந்தாமணியூர் பிரிவு சாலையில் இருந்து சிந்தாமணியூர் வரை செல்லும் தார் சாலை சென்று சேர்கிறது என்றால், சரிதான்.

70) மேற்படி எங்களது பாக நிலங்களுக்கு வருவதற்கு காந்தி சிலையிலிருந்து தெற்கு நோக்கி வரும் பொது பாதை வழியாகவும், மறுபுறம் சிந்தாமணியூர் தார் சாலையிலிருந்து மேற்கு நோக்கி வரும் பொது பாதை வழியாகவும், வரமுடியும் என்றால், சரிதான்.

71) 1ம் பிரதிவாதி வீட்டிற்கு தெற்குபுறமும், மேற்குபுறமும் எங்களுக்கு பாத்தியப்பட்ட தறிக்கொட்டகைகள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினையில் எங்கள் இருவருக்கும் ஒதுக்கப்பட்ட பொது பாதையிலிருந்து என் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து நிலங்களுக்கும் செல்ல முடியும் என்றால், சரிதான். ஆனால், மேற்படி மேடாக உள்ள நிலப்பரப்பிற்கு மட்டும் என் நிலத்தில் வழி அமைத்தால் மட்டும் தான் செல்ல முடியும்.

72) என் வழக்குரை பத்தி 8ல் "பொது வீதியிலிருந்து தெற்கு நோக்கி ச.எண்.284/2B6ன் வழியாக சென்று, பின்னர் ச.எண்.284/4A நெம்பரில் சந்திரசேகருக்கு பிரிந்த புஞ்சை ஏக்கர் 1.23 –1/2 சென்ட் நிலத்தின் வடபுறம் ஓரமாக கிழமேலாக தென்வடல் 10 அடி அகலத்தில் சரவணனுக்கு பாத்தியப்பட்ட கிரய சொத்துக்கு செல்லும் தடவழி பாத்தியத்தை நம்மில் டி.இ செட்யூல்தாரர்கள் எப்போதும்

போல் மாமூலாக உபயோகப்படுத்தி வர வேண்டியது" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

73) மேற்படி வழக்குரையிலேயே மேற்படி 10 அடி தென்வடலாக செல்லும் பாதை என் தந்தைக்கு பாத்தியப்பட்ட 1.23–1/2 சென்ட் நிலத்தின் வடபுற ஓரமாக செல்வதாக நான் சொல்லியுள்ளேன் என்றாலும், மேற்படி பாதையை என் தந்தையும், 1ம் பிரதிவாதியும் மாமூலாக உபயோகித்து வரவேண்டியது என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

74) ச.எண்.284/2Bல் உள்ள நிலத்தை பொறுத்து 1992ம் ஆண்டு முதல் 2003 ம் ஆண்டு வரை பல கிரய ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி ச.எண்.284/2B மற்றும் அதன் வெவ்வேறு உட்பிரிவுகளில் உள்ள நிலங்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள கிரய பத்திரங்களிலும், 10 அடி அகல தென்வடல் பாதை செல்வதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்புகள் கண்டுள்ள எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், செய்துள்ளேன்.

75) மேற்படி பாதையாக காண்பிக்கப்பட்டுள்ள நிலங்கள் அனைத்தும் நத்தம் நிலங்களாக வகைபாடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி நிலத்தில் அனுபவத்தில் உள்ள நபர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், பாதையாக காட்டப்பட்டுள்ள நிலம் நத்தம் நிலம் கிடையாது. மேற்படி பாதையை தவறாக உட்பிரிவு செய்துள்ளார்கள் என்றுதான் இவ்வழக்கையே தாக்கல் செய்துள்ளேன்.

76) மேற்படி நிலங்கள் நத்தம் நிலங்கள் என்பதால் அதில் நான் பாதை கோர இயலாது என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட நிலங்களில் நான் பாதை கோர இயலாது என்றால், சரியல்ல. நான் பாதை செல்வதாக சொல்லும் ச.எண்.284/2B மற்றும் அதன் உட்பிரிவுகள் தொடர்புடைய எந்த கிரய ஆவணங்களிலும், வருவாய் துறை ஆவணங்களிலும் அவ்வாறு பாதை எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல.

77) என் வழக்குரையிலேயே நான் ச.எண்.284/2B11 ஆனது 1ம் பிரதிவாதியால் குறிப்பிட்ட செக்குபந்தி விவரங்களுடனும், அறுதியிடப்பட்ட நான்கு எல்லை அளவுகளுடனும் அவரால் கிரயம் பெறப்பட்ட சொத்து என நானே ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மேற்படி நிலத்திற்கு தொடர்புடைய எந்த தடவழி குறித்தும் நான் உரிமை கோர இயலாது என்றால், சரியல்ல.

78) கடந்த 30 ஆண்டுகளாக நானும், என் குடும்பத்தாரும் மேற்படி ச.எண்.284/2B11B ல் உள்ள பாதையை பயன்படுத்தி வருவதாக சொல்வதற்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. பாகபிரிவினை ஆவணத்தில் அது உள்ளது.

79) ச.எண்.284/2B11B ஆனது வருவாய் ஆவணங்களில் காலி நிலமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதை வண்டிப்பாதையாக வகைபாடு செய்து கொடுக்க கூறி வருவாய் துறை இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஏதேனும் விண்ணப்பம் அளித்துள்ளேனா என்றால், இல்லை. வழக்கு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி பரிகாரத்தை இவ்வழக்கிலேயே கேட்டுள்ளேன்.

80) மேற்படி ச.எண்.284/2B11B உள்ள நிலத்தை வகைபாடு செய்ய கோரி பட்டா பாஸ் புத்தக சட்டத்தின் படி வட்டாட்சியரை அணுகி மனு அளிக்காத போது நேரடியாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால், சரியல்ல.

81) என் வழக்குரை சொத்து விவரத்தில் 2–வது அயிட்ட சொத்து தொடர்பாக அதில் கண்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளை 2–வது அயிட்ட சொத்தின் வழியாக பயன்படுத்தும் உரிமையை விளம்ப கோரியும், மேற்படி என் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

82) என் வழக்குரையில் நான் 4–வது பரிகாரமாக மேற்படி ச.எண்.284/2B11B ல்செல்லும் 10 அடி பாதையின் மையப்பகுதியில் 1ம் பிரதிவாதியால்

பறிக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு வரும் குடிநீர் இணைப்புகளை அகற்ற கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால், சரிதான்.

83) மேற்படி நான் கோரியுள்ள இரண்டு பரிகாரங்களையும் பரிசீலித்தாலே மேற்படி ச.எண்.284/2B11B ல் எனக்கு குடிநீர் குழாய்கள் கொண்டு செல்ல உரிமை உள்ளது என விளம்புகை செய்யவும், என்னுடைய குடிநீர் குழாய்களை அகற்ற கூடாது எனவும், அதே சமயத்தில் 1ம் பிரதிவாதியின் குடிநீர் குழாய்களை அகற்ற கோரியும் முரண்பட்ட பரிகாரங்களை கோரியுள்ளேன் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி மேற்படி பொது பாதையை பயன்படுத்துவதற்கு தடை ஏற்படுத்தும் விதத்தில் மேற்படி ச.எண்.284/2B11B ன் மேற்பரப்பிலேயே குடிநீர் குழாய்களை அமைத்துள்ளதால் அவ்வாறு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன்.

84) மேற்படி 1ம் பிரதிவாதி மேற்படி பொது பாதையை பயன்படுத்துவதற்கு தடை ஏற்படுத்தும் விதத்தில் மேற்படி ச.எண்.284/2B11B ன் மேற்பரப்பிலேயே குடிநீர் குழாய்களை அமைத்துள்ளார் என நான் என் வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும், உண்மையில் அவர் அமைத்திருந்தால் நான் சொல்லியிருப்பேன் என்றாலும், சரியல்ல.

85) பாகபிரிவினை ஆவணத்தில் என் தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஒதுக்கப்பட்ட தடவழி பயன்பாட்டில் உள்ள நிலையில், மேற்படி தடத்தின் வழியாகவே என் பாக சொத்து அனைத்திற்கும் செல்வதற்கு வழிவகை உள்ள நிலையில், கற்பனையாக நிலையில் இல்லாத ஒரு தடவழியின் பேரில் நான் இவ்வழக்கில் பரிகாரம் கோருகிறேன் என்றால், சரியல்ல.

86) என் வழக்குரையிலேயே தற்போது தாவாவில் கோரியுள்ள தென்வடல் 10 அடி அகல பாதையை தவிர வேறு மாற்று பாதை எதுவும் இல்லையென நான் கோராததால், அதன் அடிப்படையிலேயே என் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. நான் மேற்படி தாவாவில் கோரியுள்ள தடவழியின் பேரில் வசதியுரிமை கோராததாலும் என் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

87) என்னுடைய சொத்தை அடைவதற்கு 3 வழிப்பாதைகள் உள்ளதாக நான் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் தற்போது இவ்வழக்கில் நான் கற்பனையாக ஒரு பாதையை கோருகிறேன் என்றால், சரியல்ல. என் நிலத்திற்கு ஆவணங்களின் படியே 3 வழித்தடங்கள் உள்ள நிலையில் தற்போது தாவாவில் நான் கோரும் வழித்தட உரிமை எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

88) இவ்வழக்கில் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரத்திற்குரிய ஆவணங்களை நான் கோரவில்லை என்றாலும், தாவா சொத்திற்கு செல்ல மாற்றுப்பாதை உள்ளதாலும், தனி நபருக்கு சொந்தமான சுயார்ஜித சொத்துக்களில் நான் தடவழி உரிமை கோர இயலாது என்பதால் என் தாவா தள்ளுபடி செய்ய தக்கது என்றால், சரியல்ல.

( 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.